செ.வெ.எண்:46 நாள்:26.02.2018

# அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவராக திருமதி.மு.விஜயலட்சுமி இ.ஆ.ப., அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவராக **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (26.02.2018) காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன் அவர்கள் பொறுப்புகளை ஒப்படைக்க, மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப., (Tmt.M.Vijaya Lakshmi, I.A.S.,)** அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார்கள்.

புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனைத்துத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

**பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-**

கோவை மாவட்டத்தின் (Sub Collector) சார் ஆட்சியராகவும், திருச்சி மாநகராட்சி ஆணையராகவும், ஈரோடு மாநகராட்சி ஆணையராகவும் பணியாற்றி, பெருநகர சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (சுகாதாரம்) பணியாற்றி, தற்போது மாவட்ட ஆட்சியராக அரியலூரில் பொறுப்பேற்றுள்ளேன்.

அரியலூர் மாவட்டத்தில் சுகாதாரத்துறையில் மக்கள் நலன் காக்க பணிகள் மேம்படுத்தப்படவும், கல்வித்துறையில் மேலும் வளர்ச்சி அடையவும், குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு பணிகளை மேற்கொள்வேன் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.